# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.304/2023

DEPOSITION OF WITNESS FOR PW-2

| | | |
|---|---|---|
| NAME | : | திரு.முருகன் |
| Father/ Husband NAME | : | திரு.தவசி |
| VILLAGE | : | செய்துங்கநல்லூர் |
| TALUK | : | கோவில்பட்டி |
| CALLING | : | மனுதாரர் தரப்பு சாட்சி |
| AGE | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.

<u>முதல் விசாரணை</u> :–

இந்த வழக்கின் 3ம் நபர் மனுதாரர் தரப்பில் 2ம் சாட்சி ஆவேன். வழக்கு சம்மந்தமாக எனது சாட்சியத்தின் முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.1.

<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கொத்தனார் வேலை செய்கிறேன். கான்ரெக்டாக வேலை செய்கிறேனா அல்லது தனியாக வேலை செய்கிறேனா என்றால் தனியாக வேலை செய்கிறேன். வேலை முடிந்து எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் 6.30 மணிக்கு வருவேன். நான் தற்போது செய்துங்கநல்லூரில் குடியிருக்கிறேன்.

இறந்துபோன முருகன் எனது அண்ணன் மகன் ஆவார். விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் உண்மையல்ல என்றும் இறந்துபோனவர் என் அண்ணன் மகன் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் நான் இருந்தேன் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது சாட்சியம் உண்மைக்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.